பதிவு எண் : M. 6311 ★ தோல்பேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை:7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D.M.K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ, எம்.எல்

மலர்: 15] சென்னை: மார்கழி 13 (28—12—67) வியாழன் ★ வெளியூர்: மார்கழி 14 (29—12—67) வெள்ளி [இதழ் 163

தமிழக மாணவர் இந்தி எதிர்ப்பு உணர்வு :

'காலவரையின்றி அடக்கிவைத்திருக்கமுடியாது'

'எப்போது--எப்படி வெடித்துக் கிளம்பும் எனவும் சொலவதற்கில்லை'

'நிறுபூத்த நெருப்பு' என்ற நிலையை மீண்டும் சுட்டிக்காட்டுகிறார் முதலமைச்சர் அ ண் ணா

'பிரிவினைக்கு வழிவகுக்கிறார்கள் இந்தி வெறியர்கள்' என இந்தியத் தலைநகரில் எச்சரிக்கை



புதுடில்லி, டிச. 28 —

"வடக்கே இந்தி வெறியர்கள் காட்டும் ஆதிக்க உணர்வுகள், தெற்கே—குறிப்பாக தென்னக மாணவர் சமுதாயத்தினரிடையே பிரிவினைக் கோரிக்கையைத்தான் வளர்க்க உதவுகிறது"

என, இந்தியத் தலைநகரில் நேற்று, தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் எச்சரிக்கை தந்து, கருத்தறிவித்தார்.

செய்தியாளர்களிடையே பேசிய அண்ணா அவர்கள், 'தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு உணர்வு எப்போதும் அழிந்தபட்டது கிடையாது; மறைந்துவிடவும் இல்லை; நிறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது' என்று முன்பு அவரே மாநிலங்களவையில் பேசி மிருப்பதனை மற்றவர்களுக்கு நினைவுறுத்தும் வகையில் தெரிவித்ததாவது :—

"இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளைச் சற்று நிறுத்திவைக்கு மாறு கேட்டுக்கொண்ட எனது கோரிக்கைக்கு மாணவர்களும் பணிந்து, போராட்டங்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

"ஆனால், 'இந்தி எதிர்ப்பு உணர்வினை நிரந்தரமாக விட்டுவிடுங்கள்' என்று என்னால் அவர்களைக் கேட்டுக்கொள்ள முடியாது. மத்திய ஆட்சியினர் நிறைவேற்றியிருக்கும் சட்டத்துக்கு எதிராக அவர்கள் கொண்டிருப்பது, உண்மையான மனக் கொதிப்பு—உள்ளக் குமுறல்; அது எப்போது வெடிக்கும்—எத்தனை முறை வெடித்தெழும்—எப்படியெல்லாம் வெடித்துக் கிளம்பும் என்பது, எனக்கும் தெரியாத ஒன்றாகும்."

தமிழக அரசின் படி அரிசித் திட்டம் :

'நிதி வசதிகள் பாழ்படுத்தப்படவில்லை'

திட்டக் குழுவுக்கு அண்ணா தெளிவுரை

"படி அரிசித் திட்டத்தினை அமுல் நடத்துவதனால் தமிழக அரசு, நிதி வசதிகளைப் பெரும் அளவுக்கு—அதற்கான வழி முறைகளில் செலவு செய்து, மற்றத் துறைகளைப் புறக்கணிக் கிறது" என்று பரவலாக இருக்கும் தவறான எண்ணத்துக்கு, முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று புதுடில்லியில், திட்டக் குழுவின் பொறுப்பாளர்களிடம், தெளிவான நிலை விளக்கத்தைத் தந்திருக்கிறார்.

"படி அரிசித் திட்டத்துக்காகத் தேவைப்படும் கூடுதல் நிதியினைத் தமிழக அரசு, புதிய வரி இனங்களின் மூலம் சரிகட்டிக் கொள்கிறது; அத்துடன், இரண்டு கோடி ரூபாய் வரை பெற முடியும்' என்ற நம்பிக்கையில், லாட்டரிச் சீட்டு மூலை ஒன்றினையும் இத்திட்டத்துக்காக அறிமுகப்படுத்தும் எண்ணத்தில் தமிழக அரசு இருக்கிறது; எனவே, 'படி அரிசித் திட்டத்துக்காக வேறு வகைக்கான நிதி வசதிகளைப் பயன்படுத்துவதாக' க் கூறப்படும் கருத்தினை ஜயத்துக்கிடமில்லாமல் பொய்ப்பித்துக் காட்ட முடியும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தெளிவாக எடுத்துரைத் தார்கள்.

அடுத்ததாக ஜனசங்கம்?

கேரள அரசியலில் மற்றுமோர் மையப் புள்ளி

"காங்கிரசு—கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளுக்கு கேரள மக்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் ஆட்சியில் அமர்த்திச் சலித்துப் போய்விட்டனர்! அடுத்ததாக, ஜனசங்கம் அங்கே வேரூன்றி வளர்ந்து நிர்வாகத்தைப் பிடிப்பதற்கு வாய்ப்பு—வசதிகள் இருக்கின்றன; எனவேதான், தன் னுடைய 14-வது அனைத்திந்திய மாநாட்டை, ஜனசங்கம், கள்ளிக்கோட்டை நகரில் கூட்டியிருக்கிறது"

என்று, அமமாநாட்டின் வரவேற்புக் குழு அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"கேரள மண்ணில் ஜனசங்கம் நல்ல வளர்ச்சியைப் பெற இருக்கிறது; நாளைக்காம் பொதுத் தேர்தலுக்குப் பின்னர், 'காங்கிரசு, எதிர்க்கட்சியாகவும் இருக்க இலாயக்கற்றது' எனபதனை மக்கள் புரிந்து கொண்டுவிட்டனர்; 'கம்யூனிஸ்டு ஆட்சியும் பய னளிக்கவில்லை' என்பது தெளிவாகி விட்டது; எனவே, இந்த வெறுமையை நிறைவு செய் யக்கூடியது ஜனசங்கமே"

என்று மாநாட்டின் வரவேற்புக் குழு அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

போராட்டத்திலிருந்து தப்புவதற்குத் தனிவிமானதளம்

சொந்த மாநிலத்தில் இந்திராவுக்கு உள்ள நிலை

அடுத்த சனவரித் திங்கள் 8-ம் நாள் காசி\ பல்கலைக் கழகக் கட்டிடத்துக்குள ஜனசங்க விஞ் ஞானக் கழகத்தின் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றினைத் துவக்கி வைப்பதற்காக வருகைதர விருக்கும் இந்திரா வுக்காக, தனி விமானத் தளம் ஒன்று கல்லூரி மைதானத்தில் றீறு வப்படுகிறது.

வழக்கமான பாதையில் வர் தால், மாபெரும் மாணவர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன் றினைச் சமாளிக்க வேண்டி யிருக்கும் என்பதால், இரா னுவ ஹெலிகாப்டர் மூலம் தலையைமைச்சர், நேராகப் பல்கலைக் கழகக் கட்டிடத்துக் குள்ளேயே வந்து சேருவதற்காக இந்தத் தனி வசதி செய் யப்படுகிறது.

வலது கையால் கொடுத்ததை இடது கையால் பறித்தனர்!

ஆட்சிமொழிச் சட்டத் திருத்தம்--- கொள்கை: அறிஞர் அண்ணா விளக்கம்

"ஆட்சிமொழிச் சட்ட (திருத்த) மசோதாவினைக் கலப்படம் செய்யாமலும், அதனுடன் நிறைவேற்றியுள்ள ஆட்சிமொழி பற்றிய கொள்கை அறிவிப்புத் தீர்மானம் இல்லாமலும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமானால், இந்தி பேசாத மக்கள் ஓரளவுக்காவது பயன் பெற்றிருப்பர்.

"'ஆங்கிலம் காலவரையறையின்றி நீடிக்கும்' என்ற வழி வகை சட்டத்தில் இருப்பதால், கலப்படம் செய்யப்பட்டா லும் சிறிதளவு திருப்தியைத் தருகிறது; ஆனால், அச்சட்டத்து டன் நிறைவேற்றப்பட்டிருக்கும் அரசினர் கொள்கைத் தீர்மானம், சட்டத்தின் மூலம் அவர்கள் வலது கையால் கொடுத்ததை, இடது கையால் எடுத்துக்கொண்டதற்கு ஒப்பாகிவிட்டது.

"வேலைவாய்ப்புக்கான தேர்வுகளில், 'ஆங்கிலம் அல்லது இந்தி கட்டாய மொழி' என்ற அரசினர் கொள்கையில் உள்ள நிலை, இந்தி பேசாத மக்களுக்கு மாபெரும் பாதகமாகும்"

என, நேற்று புதுடில்லியில் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர் கள், 'இங்கு' நிகழ்ன தனி நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனசங்கத் தலைவர் அபாண்டம் ---டில்லியில் அண்ணா மறுப்பு

புதுடில்லி, டிச. 27—

இந்தி எதிர்ப்பாளர்கள்மீது நட வடிக்கை எதுவும் எடுக்கவேண் டாம் என்னு ஜனசங்கத் தலைவர் திரு. வாஜ்பாயியிடம் தாம் கூறிய தாக வெளியான செய்தியைத் தமி முக முதலமைச்சர் அண்ணா அவர் கள் இன்று மறுத்தார்.

திங்கட்கிழமையன்று அண்ணா அவர்களைச் சந்தித்த திரு. வாஜ் பாயி, கோழிக்கோட்டில் செய்தி யாளர்களிடையே பேசுகையில், இந்தி எதிர்ப்பாளர்மீது நட வடிக்கை எடுக்கவேண்டாம் என்று தாம் கூறியிருப்பதாத அண்ணா அவர்கள் ஒப்புக் கொண்டதாகத் தெரிவித்திருந் தார். இதனை அண்ணா அவர்கள் மறுத்து அறிக்கையொன்றினை வெளியிட்டிருக்கிறார்கள்.

முட்டைக்குள் குஞ்சு இல்லை!

முட்டைக்குள் முட்டை!

பெஷாவரில் உள்ள கோழி ஒன் றின் முட்டையில், வழக்கமாக இருக்கும் கருப்பொருள் இல்லை! இயற்கைக்கு மாறுக, அதனுள் இன்னொரு முட்டை இருந்திருக் கிறது!

உள்ளே இருந்த முட்டையில் தான், கருப்பொருள் இருந்திருக் கிறது!

காதில் விழுந்தது!

"கடைசியில், சுப்பிரமணி டமே தலைவராக வந்துவிட் யார் போலிருக்கிறதே!"

"என்ன — கேள்வியில் 'பொடி' வைக்கிறாய்?'கடை சியில்' என்று சொல்வ தைப் பார்த்தால், ஏதோ போட்டியின் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்டிருப்பதாக அல்லவா பொருள்படுகி றது?"

"நான் அப்படிப்பட்ட கருத்திலும் கேட்கவில்லை; அவ்வளவு தூரத்திற்கு நான் நிலைமையைப் புரிந்து கொள்ளாதவனுமில்லை; போட்டி போட ஆளே கிடைக்காமல — போட்டி யின்றி நிற்கவும் எவருமில் லாமல்—கடைசியில் சுப் பிரமணியமே கிடைத்து விட்டார் போலிருக்கிறதே—அதைத்தான் கேட்டேன்!"

"என்னசெய்வது?—நேரம் அப்படி! துன்பத்துக்குத் தோள் கொடுக்க முன்வரு வதென்றால், எவரும் இரு முறை சிந்திக்கத்தான் செய் வர்! சுப்பிரமணியமே குறிப் பிட்டதைப்போல் காங்கிரசு இன்று எதிர்க் கட்சியாக அல்லவா இருக்கிறது?"

"ஆமாம்; ஏறக்குறைய இதே நிலைமைதான் 'பெரிய தலைவர்' பதவிக்கும்! 'அழி யும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தின் தலைமைப் பதவியில் நான் இருக்க மாட்டேன்' என்று சர்ச்சில் சொல்லி யிருப்பதாக நினைவு! ஆங் காங்கே சரியும் காங்கிர சுக்கு யார்தான் 'கான்—ஸ்' என்று தலைவராக வரச் சம மதிப்பர்! இந்த வகையில் பார்த்தால், நிஜலிங்கப்பா வும் சுப்பிரமணியமும் பாராட்டப்பட வேண்டிய வர்களாதான்!"

"அதுசரி; சுப்பிரமணி யம் வந்திருப்பது பற்றி, காமராசர் ஏதும் சொல்ல வில்லையே!"

"சொல்லியிருக்க வேண் டும்; அதுதான முறை -- அழகு; ஆஹா, ஏனோ மௌனமதான காட்டியருக் கிறார்! இருந்தாலும், சுப் பிரமணியம் கெட்டிக்காரர்! —'நான் தலைவராக வந்தா லும், காமராசர் போன்ற தலைவர்தான வழிகாட்ட வேண்டும்' என்று வலிந்து உறவாடியிருக்கிறார்!"

"அது போகட்டும்; சுப் பிரமணியம் எப்படி?"

"அதைத்தான், உன்னைப் போல ஒவ்வொருவரும் கேட்கிறார்கள். அது மட்டு யல்ல; தமிழ்நாட்டுக் காங்கி ரசுக்காரர்களும் கேட்கிறார் கள்!"

"ஏன் அப்படி? சுப்பிர மணியம் ஒன்றும், காங்கிர சுக்கு 'வந்தவர்' பட்டியலில் இருப்பவரில்லையே! அக் கட்சியிலேயே 'பிறந்தவர்' கள் வரிசையில் இருப்பவர் தானே!"

"அதனால்தான் சொல்லு கிறேன்—'அவர் எப்படிப் பட்டவரெனக் காங்கிரசுக் காரர்களுக்கும் புரியவில்லை' என்று! ஏனென்ருல், 'தமிழ்நாடு காங்கிரசு' என்று வெளியே தெரிவது, 'வந்தவர்கள்' அடங்கிய ஒரு கூட்டத்தினராலே மட் டுந்தான்! அவர்களெல் லாம், சுப்பிரமணியத்தின் புதிய தலைமையின்கீழ் எப் படி நடக்கப்போகிறார்கள் என்பது, உனக்கும் எனக்

(1-ம் பக்கம் பார்க்க)

திராவிட முன்னேற்றக் கழகம்
ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எல்.டி.

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 13 (28—12—67) வியாழன்

சலுகை அல்ல -- பகைமூட்டும் சதி!

நாடாளுமன்ற உறுப்பினரான சேத் கோவிந்த தாஸ் அவர்களே, இந்தி எதிர்ப்பாளர்களுக்கு அறிமுகம் செய்யத் தேவையில்லை, தமது தலைக்கேறியுள்ள இந்தி வெறியால் அவர், தம்மை நாள் தவறாமல் விளம்பரப்படுத்திக் கொண்டிருப்பவராவார்!

அவர், பழம்பெரும் காங்கிரசுக்காரராக இருந்தாலும்கூட, இந்தி மொழி பற்றிய பிரச்சினை வருகின்றபொழுது, காங்கிரசுக் கட்சியைக்கூட உதறித் தள்ளிவிடக்கூடிய அளவுக்கு இந்தி மொழி வெறியெடித்தவர் அவர்! நாட்டின் ஒருமைப்பாடு தேவையா—அல்லது இந்தி ஆட்சிமொழியாக ஏற்றம் பெற்றிட வேண்டுமா என்றால்—அவரைப் பொறுத்தவரையில்—இந்தி மொழி ஆதிக்கம் பெறுவதைத்தான் வாழ்த்தி வரவேற்பார்!

"இந்தியா சிறு சிறு துண்டுகளாகப் பிளவுபட்டுப் போனாலும் பரவாயில்லை; இந்தி கோலோச்சினால் போதும்" என்ற மனப் பாங்கைப் பெற்றிருப்பவர் சேத் கோவிந்த தாஸ்! இராணுவத்தை ஏவியாவது அச்சுறுத்தி, 'இந்தியின் ஆதிக்கத்துக்குத் தென்னக மக்களே அடிமையாக வேண்டும்' எனப் பகற்கனவு கண்டுகொண்டிருக்கின்றவர் அவர்!

'இந்தி மொழிக்கு அரசியல் ஆதிக்கம் தேடித்தர வேண்டும்' என்பதுதான் அவருடைய வாழ்க்கை இலட்சியம்! 'அந்த ஒளி றைக் கருத்தில் கொண்டுதான் அவர், காங்கிரசுக் கட்சியுடன் தம்மைப் பிணைத்துக்கொண்டிருக்கின்றார்' எனக் கொள்ளுவதுகூட மிகையாகாது!

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழித் திருத்த மசோதாவையும்—தீர்மானத்தையும் ஆதரித்து காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அன்பது உறுப்பினர்களும் வாக் களித்தனர்; ஆனால் சேத் கோவிந்த தாஸ் அவர்களோ, கட்சிக் கட்டுப்பாட்டையும் பொருட்படுத்தாமல், மேற்படி மசோதாவுக் கும்—தீர்மானத்துக்கும் எதிராக வாக்களித்த பெருமையைத் தேடிக்கொண்டவர்!

இந்தி பேசாத பகுதி மக்கள் அனைவரையும் இந்தி மொழி ஆதிக்கத்துக்கு அடிமையாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற சேத் கோவிந்த தாஸ் அவர்கள், இந்தி பேசாத மக்கள் விரும்பி இந்தியை ஏற்றுக்கொள்ளச் செய்யப் புதிய வ்லை ஒன்றை வீசியிருக்கின்றார். அவருடைய புதிய வலையை, 'தேன் தடவிய நஞ்சு' என்றுதான் தீர்மானிக்க வேண்டும்!

இந்தி வெறியரான சேத் கோவிந்த தாஸ், இந்தி மொழியுடன் தென்னக மொழிகளான தமிழ், தெலுங்கு, அல்லது வங்காளி ஆகிய ஏதாவது ஒரு மொழியை, இந்தி மொழியுடன் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளத் தாம் ஆயத்தமாக இருப்பதாகவும், இந்தி பேசும் பகுதியினரை அதன் ஏற்றுக்கொள்ளச் செய்வதாக வும் அறிவித்திருக்கின்றார்; அதாவது, 'இரண்டு ஆட்சிமொழிக் கொள்கையை ஏற்பதற்கு, சேத் கோவிந்த தாஸ் துணிந்திருக்கின் ரூர்' என்பதாகும்.

'இந்தி மட்டுமே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்' என்ற ஆட்சிமொழி ஏற்பாட்டை, இந்தி பேசாதவர்கள் முழுமூச்சாக எதிர்ப்பது, தங்கள் தாய்மொழிகளே இந்தி மொழிக்குப் பதிலாக ஆட்சிமொழிகளாக ஆக்கவேண்டும் என்பதற்காக அல்ல—அப் படி இந்தி பேசாதவர்கள் கோரியிருக்கும்பட்சத்தில், தமிழ்—தெலுங்கு—வங்காளி ஆகியவைகளில் ஏதாவது ஒரு மொழியை, இந்தியுடன் இரண்டாவது ஆட்சிமொழியாக ஆக்கத் தாம் ஆயத்த மாக இருப்பதாக சேத் கோவிந்த தாஸ் கூறுவதில் பொருளுண்டு.

ஆனால், இந்தி பேசாத பகுதியினர், 'இந்தி மட்டுமே ஆட்சி மொழி' என்ற ஏற்பாட்டை எதிர்ப்பதற்கு, 'மற்ற மொழியினரை விட இந்தி மொழியினர், அரசியலில் ஆதிக்கம் பெற்றுவிடுவர்' என்பதே அடிப்படைக் காரணமாகும். இக்காரணத்துக்காகத் தான், பல்வேறு மொழியினரும், தங்களை அன்னருக்கும் பொது வாக உள்ள ஆங்கிலம், 'இந்தியுடன் இணை ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்' எனத் தீவிரமாகக் கோரிவருகின்றனர்.

இந்தி பேசாத பகுதி மக்கள் கோரிக்கையின் உண்மை இவ் வாறு இருந்திட, ஏதோ தங்கள் தாய் மொழிகளில் ஏதாவது ஒரு மொழியை இந்தியுடன் ஆட்சி மொழியாக ஆக்கிவிடவேண்டும் என்ற நோக்குடனோதான், 'இந்தி மட்டுமே ஆட்சி மொழி' என்ற ஏற்பாட்டை அவர்கள் எதிர்த்துவருவதுபோல், உண்மையைத் திரித்து, சேத் கோவிந்த தாஸ் கூறியிருப்பது விபரீதகருத்தாகும்.

எதிர்ப்பின் உண்மை தெரியாததலைதான், அவர் அவ்வாறு கூறியுள்ளார் எனக் கொள்ளுவது பேதமையாகும். எதிர்ப்பின் உண்மையைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிந்துதான், சேத் கோவிந்த தாஸ் அவ்வாறு கூறியுள்ளார்.

சேத் கோவிந்த தாஸ் கூற்றுப்படி, 'தமிழ் மொழியை இந்தி யுடன் மற்றொரு ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று தமிழகம் கோரப்போவது கிடையாது. அப்படி ஒருவேளை கோரும்பட்சத்தில், அதை, தென்னகத்தைச் சேர்ந்த மற்ற மூன்று மொழியினரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதுடன், எதிர்க் கவும் செய்வர்.

இதேபோலத்தான், 'வங்காள மொழியை இரண்டாவது ஆட்சிமொழியாக ஆக்கவேண்டும்' என்ற கோரிக்கையையும், ஆந்திரர்—தமிழர்—மலையாளிகள் ஆகிய அனைவரும் கூட்டாகச் சேர்ந்து எதிர்ப்பர்.

'தமிழ் மொழியை இரண்டாவது ஆட்சிமொழியாக ஆக்க வேண்டும்' எனத் தமிழர்கள் கோரினலும்—'எங்கள் தாய் மொழியை ஆட்சிமொழியாக ஆக்கவேண்டும்' என ஆந்திரர்கள் கோரினலும்—இப்படிக் கோரக்கூடிய குறிப்பிட்ட மொழியினரை, மற்ற மொழியினர் அனைவரும் பகைப்பர்—அக்கோரிக்கையை முழு மூச்சாக எதிர்க்கவும் செய்வர்!

ஆட்சிமொழி இந்தியை எதிர்ப்பதிலும், ஆங்கிலத்தை இரண்டாவது ஆட்சிமொழியாக ஏற்பதிலும் பெரும் பாலும், அதன் அலுவல்கள் நடத்தப்படுகின்றன!

"ஐ. நா. மன்ற அலுவலகத்தில், ஆங்கிலத்திலேயே பெரும் பாலும், அதன் அலுவல்கள் நடத்தப்படுகின்றன!

"ஐ. நா. மன்ற அலுவலக ஊழியர்களில், நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்டவர் வேலே செய்கிறார்கள்; இவர்களில் 10-க்கு மேற்பட்ட தாய்மொழியாகக் கொண்டவர்கள்; மிகுந்தவர்களில் பெரும்பான்மையோரும் தங்கள் வேலைகளை ஆங்கிலத்திலேயே செய்கின்றனர்!

"ஒரு குறிப்பிட்ட ஆண்டில், அறிவியல் துறையின் முன்னேற்றத்தைக் குறிப்பிடும் 37,000 மொழிபெயர்ப்புகள் வெளியிடப்பட்டன; இவற்றில் 13,000-க்கு மேற்பட்டவை ஆங்லத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை!

"உலகின் பெரும் பகுதியிலுள்ள நாடுகள், ஒன்றுடன் மற்றொன்று தொடர்பு ஏறபடுத்திக்கொள்ள ஆங்கில மொழியைப் பயன்படுத்தப்படுவதும், ஓர் அமல்காட்டு மொழியாகப் பல்வேறு நாடுகளிலுள்ள உயர்கிலப் பள்ளிகளில் அது கற்பிக்கப்படுவதும், பல நாட்டுப் பல்கலைக் கழகங்களில் அதைக் கற்பிக்க வசதிகள உள்ளதுமே, ஐ நா. அலுவலகத்தில் அதற்குள்ள இரத்செல்வாக்கிற்குக் காரணம்.

"85 நாடுகளில் நடத்தப்பட்ட ஒரு 'சர்வே'யின்படி, 75 நாடுகளில், ஆங்கிலம் ஓர் அயல் நாட்டு மொழியாகக் கற்பிக்கப்படுகிறது; இவற்றில் 40 நாடுகளில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக உள்ளது"

என்று, ஐக்கிய நாடுகள் மன்ற பொதுச்செயலாளர் ஊ-தாண்ட தமது அறிக்கை ஒன்றில் கூறியுள் ளார்.

ஐதராபாத் ஸ்பெஷல்!

சனவரி 6-ந் தேதியன்று சென்னை செனட்ரல் நிலையத்திலிருந்து புறப்படும் தனி இரயிலில், காங்கிரசின் புதிய தலைவர் நிஜலிங்கப்பா, ஐதராபாத் மாநாட்டுக்குச் செல்ல இருக்கிறார்!

'முன்னுள் தலைவராக்' போகும் காமராசரும் நிஜலிங்கப்பாவுடன் சேர்ந்து போக இருக்கிறார்!

இத்தகவலை நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கும் காமராசரிடம்,

"மொழிப் பிரச்சினை பற்றி ஐதராபாத்தில் விவாதிப்பீர்களா?"

என்று கேட்டபோது, 'சொல்ல தற்கில்லை' என்று சொல்லி யிருக்கிறார்.

அனைத்துலக அரங்கில் ஆங்கிலம் வகிக்கும் இடம்!

காலத்தால் மறையாத கம்யூனிசத் தலைவர்
மக்கள் கருத்தில் மறைக்கப்படுகிறார்
சாதாரண மனிதராகிவிட்டார் ஜோசப் ஸ்டாலின்

"கம்யூனிச ஆட்சியின் ஐம்பது ஆண்டுக்கால வரலாறு" என்ற டெலிவிஷன் காட்சி ஒன்றில், ஸ்டாலின் மரணம் இடம்பெறுவது ஒரு நிமிடத்துக்கும் குறைவானதாகும்!

தற்போதைய இரஷ்ய அரசிலும் தொகுக்கப்பட்ட மக்களுக்காகக் காட்டப்படும் அந்த டெலிவிஷன் காட்சியில், ஸ்டாலின் மரணம் பற்றிய விமர்சன உரையிலும், சிறப்பாக ஏதும் அவரைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை!

மக்கள் பரபரப்புடன் ஸ்டாலின் மரணம் பற்றிய செய்திகளைப் படிப்பதுபோல் காட்டிவிட்டு, அதற்கான பின்னணி உரையில்,

"எவர் இறந்தாலும், அது, நமக்கு வருத்தத்தக்க அதிர்ச்சி தான்; அனைவரும் அஞ்சு மனிதர் ஸ்டாலின்; தனது வாழ்க்கையின் பெரும் ஆண்டுகளே அவர், இரஷ்யாவின் வளர்ச்சிக்காகவும், சோஷலிசத்துக்காகவும் தந்தவர்"

என்று மட்டுமே கூறப்படுகிறது.

ஸ்டாலினைப் பின்பற்றி வந்த மாலங்கோவ், நிகிதா குருஷ்சேவ் ஆகியோரைப் பற்றி இந்த டெலிவிஷன் காட்சியில் குறிப்பு கள்கூட ஏதுமில்லை!

நாடாளுமன்றத்தில் கி. மனோகரன்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கரப்பு அமைச்சராக இருந்த போது இவ்வாறு கூறினர்.

தி. மு. கழக அரசு ஒன்றுதான், 'இந்தி தனியொரு ஆட்சி மொழி' என்பதைக் கடைசி வரை முழுமூச்சுடன் எதிர்க்கி றது" எனது குற்றம் சாட்டப் படுகிறது.

இங்கு மற்றோர் எடுத்துக் காட்டையும் நான் கூற விரும்புகிறேன்.

"இந்திதான் நாட்டின் தேசிய மொழி என்று கூறிய தன் மூலம் காந்திடியடிகள் பெரும் தவறிழைத்துவிட்டார்; நாட்டில் பன்னிரண்டுக்கு மேற்பட்ட தேசிய மொழிகள் இருக்கின்றன; எல்லா மொழிகளும் சமம் என்பதை ஏற்றுக்கொண்ட பிறகு, மாலிங்குகள் தங்களுக்குள் தொடர்புகொள்ள எந்த மொழியை பயன் படுத்துவது என்பதை சரித் திரத்துக்கே விட்டுவிடுவது நடைமுறைக்கு ஒத்த தாகும்."

இப்படி அந்தப் பிரபல பிரமுகர் கூறினர். இதன்மூலம், 'ரோஜ முழ எங்கள் பக்கம் இருக்கிறது' என்றுதான் கூறுகிறோன்.

பிரமானந்த ரெட்டி, நிஜலிங் கப்பா ஆகியவர்களைப் பற்றி நீங்கள் கேட்கலாம்...

தாரகேசுவரி சின்கா:—"கேரளத்துடனிருக்கும் எல்லைப் பிரச்சினை, மற்ற பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு, கேரளம் உங்களுடன் இருப்பது பற்றி பேசுங்கள்."

பி. ஜோமூர்த்தி:— "கேரளத்துடன் எங்களுக்கு எவ்வித எல்லைப் பிரச்சினையும் கிடையாது"

கி. மனோகரன்:—"இந்த மனிதர்களே எல்லைக் கோட்டுக்கு அனுப்பிவையுங்கள்."

இறுதியாக நான் இதனைத்தான் கூறவிரும்புகிறேன். மொழியின் பெயரால் பிரிவினை வித்துக்களை விதைக்காதீர்! தி. மு. கழகத் தைப் பொறுத்தவரை அது பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட்டது. அதனை மீண்டும் உயிர்ப்பிப்பது இல்லை. ஆனால் உள்துறை அமைச்சருக்கு எனது எச்சரிக்கை இது தான்.

இவ்வகையில் இந்தி திணிக்கப் படுமானால்—இவர்களை எழுப்பு கிற நிலையினால் இந்திய ஒற்றுமை இயலாதாகிவிடும்!"

மேற்கு வங்கச் சட்டமன்றத் தலைவர் உறுதி

'எனது தீர்ப்பை மாற்றவிடேன்' என்கிறார்!

கல்கத்தா, டிச. 28—

"மேற்கு வங்கத்தில் டாக்டர் பி. சி. கோஷ் தலைமையி லுள்ள அமைச்சரவை, 'சட்ட விரோதமானது; செல்லாது' என்ற என்னுடைய கருத்தை மாற்றிக் கொள்வதற்கு இல்லை"

என்று மேற்கு வங்கச் சட்ட மன்றத் தலைவர் பானர்ஜி, செய்தி யாளரிடம் கூறியிருக்கிறார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இதற்குமுன் கண்டிராத முறை யில், ஐக்கிய முன்னணி அமைச் சரவை 'டிஸ்மிஸ்' செய்யப்பட் டிருக்கிறது; எனவே, எனது முந்திய தீர்ப்பில் மாறுதல் செய் வதற்கு நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை; அரசியல் சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்து இதுகுறித்து இறுதித் தீர்ப்பினை வழங்க நான் விரும்பினேன்.

"என்னுடைய மீறி ஏதேனும் நடக்கக்கூடும் என்று கருது கிறேன்; ஆனால் அந்த மாதிரி ஏதேனும் நடந்தால், அரசியல் சட்டப்படி நான் முழுமூச்சாக எதிர்ப்பேன்; எனவே மீறி யாரும் எதுவும் செய்ய அனு மதிக்கமாட்டேன்."

பதவி செய்யும் வேலை!

காங்கிரசுத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்படவிருக்கிற மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா, 'தென்னிந்தியா வில—முடிந்தால் மைசூரில்—மத்திய அரசு ஓர் இந்திப் பல்கலைக் கழகத்தைத் துவக்க வேண்டும்' என்று யோசனை தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியை இரண்டாவது ஆட்சிமொழியாக ஆக்கவேண்டும் எனக் கோருவதிலும், இந்தி பேசாத பகுதி மக்களிடம் ஸல்லுறவும், பிரிக்க முடியாத கொள்கைப் பிடிப்பும் இப்பொழுது இருந்துவருகிறது. இந்தி பேசாதோரிடம் இருக்கின்ற இந்த ஒற்றுமையை, சேத் கோவிந்த தாஸ் அவர்களின் கருத்துக் குலேத்துவிடும்; இந்தி பேசாதோர், தங்களுக்குள் பகைப்பட்டுப் பிளவுபட்டுப் போவர்; இந்திக்கு உள்ள எதிர்ப்புச் சிதறிவிடும்; இச்தகைய சூழ்நிலையை உருவாக்கி விட்டுவிட்டால், 'இந்தி மட்டுமே ஆட்சிமொழி' என்ற இன்றைய ஏற்பாட்டுக்கு, இந்தி பேசாதோரிடம் எதிர்ப்பே இருக்காது. இதைத் மனதில் கொண்டுதான், சேத் கோவிந்த தாஸ், மேற்கண்ட நச்சுக் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

எனவே, சேத் கோவிந்த தாஸ் அவர்களின் யோசனை, தென்னக மொழிகளில் ஏதாவது ஒரு மொழிக்கு ஆட்சிமொழித் தகுதியைத் தேடித் தருவதல்ல; இந்தி பேசாத பகுதியினரிடை உட்பகையை மூட்டிவிட்டு, இந்தி மொழிக்குள்ள எதிர்ப்பின் வலி வைக் குறைப்பதே ஆகும்.

அந்த இந்தி வெறியின் கருத்து, சவிகை அல்ல—இந்தி பேசாதோரிடம் உள்ள பரஸ்பர ஒற்றுமையை உருக்குலேக்க உலவ விடப்பட்டுள்ள சதி வேலையாகும்.

—கா. க.

தீமை விளைவிக்கும் தினிப்பு முறை வேண்டாம்

இருப்பது முறை திருத்திய அரசியல் சட்டத்தை இன்னொரு முறை திருத்த முடியாதா?

சகிப்புத்தன்மை இல்லாதவர்கள் இந்த நாட்டை ஆளத் துடிக்கின்றனர்

இந்தி வெறியர்களின் குறுக்கீடுகளுக்கிடையே கி. மனோகரன் முழக்கம்

"'எங்கே மனம் அச்சமின்றி இருக்கிறதோ—எங்கே அறிவு சுதந்தரமாக இருக்கிறதோ—எங்கே வார்த்தைகள் இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிவருகின்றனவோ—எங்கே உலகம் குறுகிய சுவர்களால் பிளவுபடாமல் இருக்கிறதோ—எங்கே பரிசுத்தத்தை நோக்கி இடையருது முயற்சிகள் செய்யப்படுகின்றனவோ—அத்தகைய சுதந்தர சொர்க்கத்தில்—என் ஐயனே—என் நாடு விழித்தெழுவதாக' என்ற தாகூரின் கனவு நிஜமாக வேண்டுமானால், 'இந்தியே தனியொரு ஆட்சிமொழி' என்ற அபத்தத் திட்டத்தைக் கைவிடுங்கள் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

"அரசியல் சட்ட 8-வது ஷெட்யூலில் கண்டுள்ள தேசிய மொழிகள் அனைத்தும் நாட்டின் ஆட்சிமொழிகளாக ஆகும்படி — அவற்றைத் தழுவி — தக்க இடம்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோன்."

என்று நாடாளுமன்ற மக்களவையில், ஆட்சிமொழி மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில், தி. மு. க. குழுவின் துணைத் தலைவர் கி. மனோகரன் கலந்துகொண்டு பேசியபோது குறிப்பிட்டார்; அவர் உரை வருமாறு :—

"ஆட்சி மொழித் திருத்த மசோதாவின்மீது நடைபெற்ற விவாதத்தை இடையில் எங்கள் குறுக்கீடும் செய்யாமல் நான் மிக அக்கறையுடன் கவனித்து வருகிறேன்; அதில் வெறுப்பும் வீரோதமும் தென்பட்டன; குடுகிடப்பட்டன; கடுமையான சொற்கள் பரிமாறிக்கொள்ளப் பட்டன.

மசோதாவின் பிரதியைக் கொளுத்தியிலிருந்து — நிறை வேறும் கட்டமான இன்றுவரை, அவையில் பலகட்சிகளின் உயர் மட்டத் தலைவர்களின் பேச்சை நான் கேட்டேன்.

அரசியல் சட்ட நிபுணர்கள் தங்கள் மூளையை மிகவும் பயன்படுத்தி, தங்கள் வழக்கு சரியானதென்பதை மெய்ப்பிக்க முயற்சி செய்தார்கள்.

சட்டரீதியான வாதங்கள் தொடர்ந்தன; நடைமுறைச் சிக்கல்கள் அலசப்பட்டன; விதிமுறைகளும் எடுத்துக்காட்டப் பட்டன.

இவை அனைத்தையும்விட அடிப்படையான ஒன்று, 'மனிதாபிமான அடிப்படையில் புரிந்து கொள்ள முயற்சி செய்வது தான்' என்று எனது கட்சி கருது கிறது.

அந்த உணர்ச்சி, இந்த அவையில், மறைந்திருந்தது என்பதை நான் வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.....'

சில உறுப்பினர்கள் :—"இல்லை, இல்லை."

கி. மனோகரன் :— "வெடித்துக் கிளம்பும் உணர்ச்சியல்ல நாம் இன்று விரும்புவது— மனப்பூர்வமான இணைப்பு.

இங்கு பேசப்பட்ட பேச்சுக்கள் அனைத்தையும் கேட்ட பிறகு, 'இந்தி பேசும் சகோதரர்கள்' இழிந்த ஒரு மொழியை வைத்துக்கொண்டு இந்த நாட்டை ஆளப் பிறந்தவர்கள் நாங்கள் தான் என்ற சுகமான முடிவுக்கு வந்துவிட்டார்கள்' என்றுதான் நான் கருதுகிறேன். இவ்வாறு கூறுவதற்கு நான் வருந்து கிறேன்.

கில உறுப்பினர்கள் :—" இல்லை, இல்லை."

திருமதி தாராகேசுவரி சின்கா:— "அவர் பயன்படுத்திய 'இழிந்த மொழி' என்ற சொல்லை நான் எதிர்க்கிறேன்." (குறுக்கீடுகள்)

கி. மனோகரன் :—"நான் இதற்குப் பணியப் போவதில்லை; நான் இன்னும் என் பேச்சை முடிக்கவில்லை."

தாராகேசுவரிசின்கா:—"'இழிந்த' என்கிற சொல்லுக்கு நான் கடுமையான மறுப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் பயன்படுத்தக் கூடாத 'இழிந்த' என்கிற அந்தச் சொல், அவைக் குறிப்புகளில் இடம் பெறுது பார்த்துக் கொள்ள வேண்டும்."

அவைத் தலைவர் :—" இந்த ஒரு சொல்லை நீங்கள் சகித்துக் கொள்ளக் கூடாதா ?"

தாராகேசுவரி சின்கா :—" பொறுமைக்கும் எல்லையுண்டு; இந்த அவுகரு எங்களால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடுகள்).

அவைத் தலைவர் :—" இதில் யாரும் பொறுமை இழக்க வேண்டாம்."

தாராகேசுவரி சின்கா :—" அவர் ஏன் அப்படிப்பட்ட சொற் களைப் பயன்படுத்தவேண்டும் ?"

அவைத் தலைவர் :—" ஒழுங்கு ஒழுங்கு; நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள்; பலதரப்பட்ட சொற்றொடர்தான் இங்கு கையாளப் படுகின்றன. நாம் தொடர்ந்து அவையை நடத்த லாம்,"

கி. மனோகரன் :—" இவர்கள் இந்த நாட்டை ஆள வேண்டு மென்று கருதிக்கொண்டிருக் கிறார்கள். (குறுக்கீடுகள்) என் னைத் திருத்திக்கொள்வதற்குக் கூட நான் தயாராக இருக் கிறேன்." (மீண்டும் குறுக்கீடு கள்)

அவைத் தலைவர் :—" ஒரு வார்த் தையைச் சகித்துக்கொள்ள உங்களால் முடியாதா ?"

இரணதீர்சிங் :—" அது நாட்டின் ஆட்சிமொழி."

டாக்டர் சுசீலா நய்யார் :—" 'அவர், மனிதாபிமான உணர்ச்சிபற்றிப் பேசுகிறார்; அத்தகைய உணர்ச்சியை வளர்க்கும் சொற்களே அவர் பயன்படுத்தவேண்டும்."

அவைத் தலைவர் :—" அந்தச் சொல், நாடாளுமன்ற மரபுக்கு விரோதமானதல்ல; அது நாற்றுக்கு நூறும் மரபுக்கு உட்பட்ட சொல்லே ஆகும்."

தாராகேசுவரி சின்கா :—" 'இழிந்த' என்கிற அந்தச் சொல், நாடாளுமன்றத்தில் பயன்படுத்தக்கூடிய சொல்தானு இல்லையா என்று நான் அறிய விரும்பு கிறேன்."

அவைத் தலைவர் :—" நாற்றுக்கு நூறு அந்தச் சொல் நாடாளு மன்றத்தில் பயன்படுத்தக்கூடிய சொல்தான்."

தாராகேசுவரி சின்கா :—" அப் படியானால், அந்தச் சொல்லைப் பயன்படுத்தலாம் என்று கூறு கிறீர்களா? நாங்கள் கருமை யாக இதனை எதிர்க்கிறோம். நாட்டின் ஆட்சிமொழியை, 'இழிந்த மொழி' என்று கூறுவதை நாங்கள் சகிக்க முடி யாது."

கி. மனோகரன் :—" அது, 'காட் டின் ஆட்சிமொழி' என்று யார் கூறுகிறார்கள் ? (குறுக்கீடுகள்).

தாராகேசுவரி சின்கா :—" நாங் கள் உண்மையிலேயே பொறு மையாக இருக்கிறோம்; ஆனால் இத்தகைய செயல்களைச் சகிக்க முடியாது. வெளியில் இது எத்த கைய எதிரொலியை ஏற்படுத் தும என்பதை அவர்கள் உணர வில்லை; 'அநந்த சொல், நாடா ளுமன்ற மரபுக்கு உட்பட்டது தான்' என்று நீங்கள் கூறியிருந் தாலுங்கூட, அந்தச் சொல்லை இங்கு பயன்படுத்துவது முறை யானதல்ல; மாண்புமிக்க உறுப் பினர் பயன்படுத்திய சொல், அபாயகரமான உட்பொருள் களைக் கொண்டது."

அவைத் தலைவர் :—" உறுப்பினர் தயவுசெய்து உட்கார வேண் டும்."

கி. மனோகரன் :—நான் இன்னும் என் பேச்சை முடிக்கவில்லை; நான் சொல்ல விரும்புவதெல் லாம்..."

ஏ. கே. சென் :—"நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப லாமா ?"

கி. மனோகரன் :—" அந்தக் குறிப் பிட்ட சொல் அவருடைய மனத் தைப் புண்படுத்துமானால், அதற் குப் பதிலாக, அழகான—வள மிக்க — பெருந்தன்மையான மொழி என்று கூறத் தயாராக இருக்கிறேன்."

ஏ. கே. சென் :—" இது மிகவும் நல்லது; நான் இந்தி பேசும் பகுதியினன் அல்லன்; தமி ழைப் பற்றிப் பெருமைகொள் வது போலவே, நான் இந்தி யைப் பற்றியும் பெருமையடை கிறேன்." (குறுக்கீடு)

அவைத் தலைவர் :—" அவர் பேசி முடிக்கட்டும்; மறுப்பவர்கள் பிறகு மறுக்கலாம்; இடை யில் அவருக்குத் தொந்தரவு தரக்கூடாது; மாண்புமிகு உறுப் பினர் இப்போது பேசலாம்,"

கி. மனோகரன் :—" ஆட்சிமொழி பற்றி அரசியல் சட்டசபையில் முக்கிய தலைவர்கள் இங்கு பேசி யதை நான கேட்டேன். தி. மு. கழகம் இப்பிரச்சினையில் எடுத் துள்ள முடிவை விளக்கிக் கூற இது சரியான நேரம் ஆகும். 'ஆட்சிமொழிக் கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண் டும்; அரசியல் சட்டத்தைப் பற்றி புதிய மதிப்பீடு செய்தாக வேண்டும்' என்பது எங்கள் கோரிக்கை; இதனை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

'அரசியல் நிர்ணய சபையால் இந்தி ஏற்கப்பட்டுவிட்டது; எனவே அதை நாமும் ஏற்க வேண்டும்' என்று இங்கே வாதம் புரியப்பட்டது; 'தேவநாகரி எழுத்துடன்கூடிய இந்தி ஆட்சி மொழியாக இருக்கும் என்று 348-வது விதி கூறவில்லையா ?' என்று அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்.

யாரேனும் என்னை ஆத்திரமூட்டி னால்—மிரட்டி, 'அரசியல் சட்டத்தில் ஒரு விதி இருக்கிறது தெரி யுமா ?' என்று என்னிடம் கேட் டால், அவர்களுக்கு என்னு டைய பதில் இதுதான்—

"அரசியல் அமைப்புச் சட்டம் என்கிற பெரிய தஸ்தாவேஜைப் பற்றித் தெரியுமா ? ஆளுங்கட்சி யின் உத்தேச நல்வாய்ப்புக் களுக்குத் தக்கபடி—எவ்வித மன உறுத்தலுமின்றி அந்தச் சட்டம் 20 முறைகளுக்கு மேல் திருத்தப்படவில்லையா? முடியாதலல் இந்தி பேசாத மக்களின் விருப்பத்துக்கும் கோரிக்கைக்கும் இணங்க அதனைத் திருத்த வேண்டி யதுதான் !"

ஆட்சி மொழிச் சட்டத்தை 1963-ல் கொண்டுவந்தபோது லால்பகதூர் சாஸ்திரி பின்வரு மாறு கூறினார் :—

"தலைமை அமைச்சர் என்ன கூறினார் என்பது பற்றி இரண்டு-மூன்று விஷ யங்களைத் தெளிவாக்க விரும்புகிறேன் :—1965 சன வரிக்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்பது ஒன்று; 'இதற்குக் கால வரை கிடையாது' என்பது அவர் கூறிய இரண்டாவது விஷயம்; 'எந்த இறுதி முடி வுக்கும் வருவதற்கு முன்னுல் இந்தி பேசாத மக்களின் கருத்தைக் கணக்கில் எடுத் துக் கொள்ளவேண்டும்' என்பது மூன்றுவது.

இப்போது இந்த அவையில்,'இந்தி பேசும் எனது சகோதரர்களின் நடவடிக்கையை என்னுல் உணர முடிகிறது.

சகிப்புத்தன்மையின்றி—இறுமாப் புடன் இந்தி பேசும் உறுப்பினர் கள் இந்த அவையில் நடந்து கொண்டனர்; இது 20 நி, 1948-லேயே பண்டித நேரு அச்சம் தெரிவித்திருந்தார்; அவர் 1949-ல் அரசியல நிர்ணய சபையில் பேசுகையில் கூறிய தாவது :—

"உங்கள் போக்கு சன நாயக அடிப்படையில் இருக் கப் போகிறதா ? அல்லது, சர்வாதிகாரம் என்று கூறத் தக்காதா அமைப்போலி றதா ? தீவிர இந்தி ஆதர வாளர்கள் பேசிய பேச்சை இங்கு கேட்டபின், 'இந்தி பேசும் பகுதிதான் நாட்டின் நடுநாயகம்' என்று அவர் கள் கருதுவதாகத் தெரி கிறது; அப்படிக் கருதும் போக்கு தவருனது மட்டு மல்ல; அபாயகரமான போக்குமாகும்; எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களையே எந்த மொழியின்மீதும் நீங்கள் அதிகாரத்தால் திணிக்க முடியாது.'

இந்த எச்சரிக்கை, தலைமை யமைச்சர் நேருவால் கொடுக் கப்பட்டது. அரசியல் நிர்ணய சபையிலும் தேசிய மொழி ஆட்சி மொழிப்பிரிவு விவாதம் நடந்தபோது, தென்னுட்டைச் சேர்ந்த டி. டி. கிருஷ்ணமாச் சாரி, என். கோபாலசாமி ஐயங் கார் போன்றவர்கள் அதை ஆதரித்ததாக வாதுபாயி கூறி னர்.

சிலரால் முன்பு சில பெருந் தவறு கள் இழைக்கப்பட்டன; அர சியல் நிர்ணய சபையில் நிகழ்ந்த அத்தகைய செயல்கள் அனைத்தையும் நாங்கள் விழுங்க வேண்டுமா ?

மேலும், இந்தி கொண்டுவரப்படு வதை எதிர்த்து ஒவ்வொரு மாநிலமும் கடுமையாகக் குரல் தும் தெரிவித்துள்ளன.

"மதிப்புத்தன்மையுடனும் தெளிந்த அறிவுடனும் இப் பிரச்சினையை அணுகுவோ மாக!

"நாம் காட்டிய அவசரம் ஏற்கனவே இங்கியாவைப் பிரித்து வைத்திருக்கிறது; அதை மேலும் பிரிக்கவேண் டாம்!

"எதிர்காலச் சந்ததியினர் மீது ஒரு மொழியைத் திணிப்பதற்குப் பதிலாக, அதனைத் தீர்மானிக்கும் உரி மையை எதிர்காலச் சந்தி யிடமே விட்டுவிடலாம்"

என்று கேரளத்தின் முன்னுள் அமைச்சரான பி. டி. சாக்கோ கூறியிருக்கிறார்.

அப்போது தமிழ்நாட்டின் பிரதி நிதிகளில் ஒருவராக இருந்த டி. ஏ. ராமலிங்கம் (செட்டி யார்), 'டெல்லியில் இருக்கும் எல்லாம் எனக்குப் புதிதாகத் தோன்றுகிறது' என்ன?...''

ஓர் உறுப்பினர்:—"அங்கிய நாட் டினரைப்போல..."

கி. மனோகரன்:—"ஆம்; அந் நிய நாட்டாரைப் போலத் தோன்றுவதற்குக் காரணம். இங்கிக்காரர்களிடம் உள்ள இறு மாப்புதான்! அவர்களிடம் விட் டுக்கொடுக்கும் தன்மை இல்லை; சமரச உணர்ச்சி இல்லை; இதெல்லாம் அரசியல் நிர்ணய சபையிலேயே கூறப்பட்டது! இதை மறந்துவிடக்கூடாது!

18 ஆண்டுகளுக்குப்பின் (குறுக் கீடுகள்) இவர்கள் ஒளவுக் மன் மை படைத்திருப்பார்கள் —சீர்திருந்தி யிருப் பார் கள் என்று கருதினேன் (குறுக்கீடு கள்); அவ்வாறு ஆகவேண்டு மென்றுதான் எதிர்பார்க் கிறேன்!

அடுத்த பிரச்சினை என்னவென் றால், இன்றைய மசோதா முழு வதுமாக ஒரு தினிப்பே தவிர, வேறல்ல!

மூன்று வகையான திருமணங் கள் இருக்கின்றன...

[காங்கிரசு உறுப்பினர் டி. சி. சர்மா என்பவர் எழுந்தார்]

கி. மனோகரன்:—" திரு. சர்மா அவர்களே! நீங்களே இந்த விஷ யத்தை மறந்துவிடுங்கள்! நீங் கள் உங்கள் வாழ்க்கையின் மாலப்பொழுதில் இருக்கிறீர் கள்!

மூன்று வகையான திருமண முறைகள் இருக்கின்றன; ஒன்று —ஏற்பாடு செய்யப்படும் திரு மணம்; மற்றது — ஆவேசத் தூண்டுதல் காதல் நிருமணம்; மூன்றுவது — கட்டாயத் திரு மணம.

இந்தித் தினிப்பு, கட்டாயத் திரு மணத்தைப் போன்றது! அதனுல் ஒருநாளும் நன்மை விளை யாது!

இப்போழுது இதுதான் பிரச் சினை; எனது கட்சியைப் பொறுத்தவரையில், 'நாட்டின் தனி ஒரு ஆட்சிமொழியாக இந்தி இருக்கும்' என்பதை ஒரு நாளும் ஏற்கமுடியாது!

இங்கு அனேகரும் ஆங்கிலத் துக்கு எதிராக இருப்பதைக் காண்கிறோன். ஆங்கிலத்திடம் 'பக்தி' எதுவும் எங்களுக்குக் கிடையாது; அது எங்கள் தாய் மொழி அல்ல; ஆனுல் ஆங் கிலம் ஓர் அறிவு மொழி—உலக மொழி; அதன் பயன் கருதியே ஆங்கிலத்தை விரும்புகிறோம்.

ஆங்கிலத்தை இழக்கவேண் டாம்; அது நமது அறுவல்கட் குப் பயன்படும்! அது நமக்குப் பணிபுரியும்!

'ஆங்கிலம் அந்நிய மொழி' என்று கூறுகிறார்கள்; இதனை எனது கட்சி ஏற்கவில்லை!

நமது நாட்டில் ஆங்கிலோ—இந் தியச் சமூகம் இருக்கிறது; அவர்களோ, 'இந்தியர்கள்' என நாம் ஏற்றுக்கொண்டிருக்கி றோம். அவர்களின் தாய் மொழி ஆங்கிலம்.

அவர்களின் தாய்மொழியான ஆங்கிலம், தேசிய மொழிகளில் ஒன்றாக எட்டாவது தெட்புலில் இடம்பெற வேண்டும் என்பதை நியாய புத்திழுள்ள அனைவரும் ஏற்பார்கள்.

ஆங்கிலம் 1947 ஆகஸ்டு 15-க் குப் பின்னுல் எசமானர்களின் மொழி அல்ல!

நாட்டின் பிரபல குடிமகன் ஒருவர் —பிற்காலத்தில் முக்கிய பத விக்கு வந்தவர்—1963-ல் பின் கண்டவாறு கூறினர் :—

"ஆங்கிலம் இனியும் ஒரு அந்நிய மொழி அல்ல: அது ஏறத்தாழ நமது நேரிய மொழியைப் போன்று: அது அந்நிய மொழியே அல்ல.....''

சில உறுப்பினர்கள் :—"இதிகக் கூறியவர் யார்? இராஜாஜியா?"

கி. மனோகரன் :—இதினச் சொன னது நமது உள்துறை அமைச் சர் (சவான்)தான்; அவர் பாது

[2-ம் பக்கம் பார்க்க]

கேரள முதலமைச்சர் காஞ்சி வருகை

கேரள முதலமைச்சர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு அவர்கள், 30—12—67 அன்று காஞ்சிபுரத்திற்கு வருகிறார்; அன்று மாலை 6-மணிக்கு இரட்டைமண்டபம் அருகில், கம்யூனிஸ்டுக் கட்சிச் சார்பில் தோழர் கே எஸ். பார்த்தசாரதி தலைமையில் வரவேற்பளிக்கப்படும்; தோழர் வி. பி. சிந்தன், மற்றும் பலர் பேசுவர்.

அமைச்சர்

சத்தியவாணிமுத்து உடல்நிலை

அமைச்சர்கள் — தோழர்கள் நலம் விசாரித்தனர்

சென்னை, டிச. 28—

இரத்தக் கொதிப்பால் உடல்நலமில்லாதிருக்கும் தமிழகத் தகவல் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களை அவரது இல்லத்தில் கல்வியமைச்சர் இரா நெடுஞ்செழியன், வேளாண்மைத் துறையமைச்சர் ஏ. கோவிந்தசாமி, என். வி. நடராசன், து. ப. அழகமுத்து ஆகியோர் சென்று சந்தித்தனர்.

திரைப்படத் தயாரிப்பாளர் எம். எம். ஏ. சின்னப்பத் தேவர், நடிகர் அசோகன், கேசவலு எம்.எல்.ஏ., திருமதி அலமேலு அப்பாதுரை ஆகியோரும் உடல் நலம் விசாரித்துச் சென்றனர்.

டாக்டர் அண்ணாமலை சிகிச்சை அளித்துவருகிறார்.

சென்னை நகரில் தவிர்க்க முடியாத அளவுக்கு முக்கியமானதாய் இருந்தால் மட்டும் சில நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம் என்றும், இப்போதைக்கு வெளியூர்ப் பயணம் எதுவும் வேண்டாமென்றும் மருத்துவர் யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மட்டுமல்லல்—சுப்பிரமணியத்துக்கே புரியாத புதிர்!''

"சாமர்த்தியசாலி! 'குழப்ப நிலைகளில் திறமை காட்டிப் பிரகாசித்தவர்' என்றெல்லாம் புகழப்பட்டவர்தானே சுப்பிரமணியம்?''

"அதெல்லாம், அமைச்சராக இருந்தபோது! இன்னும் சரியாகச் சொல்லுவதென்றால், சுப்பிரமணியம் ஒரு முழு அரசியல்வாதியாக நேற்றுதான் பிறந்திருக்கிறார்! அமைச்சராக 15 ஆண்டுக் காலம் வாழ்ந்திருக்கிறார்! பல பேரை விழுங்கிய மத்திய உணவு அமைச்சகத்தில், விழுங்கப்படாமல் தப்பித்து வந்திருக்கிறார்! இராஜாஜியின் சீடராக அமைச்சர் வேலை பார்த்து—நேருவின் மதிப்புக்கும் பாத்திரமாகி—தமிழகம் திரும்பியிருக்கிறார்! ஆனால், இதுவரையில் அவர் இருந்த பொது வாழ்க்கை வேறு—இனி இருக்கவேண்டிய நிலைமைகள் வேறு! 'எப்படி இருக்கப்போகிறார்' என்பதுதான் அனைவருக்கும் புதிராக இருக்கிறது!''

—எஸ். ஆர்.

பாலர் அரங்கம்

டிசம்பர் 29, 30-ந் தேதிகளில் மாலை 4 மணிக்கு

'நீரில் வாழும் மனிதன்'

(முழு நீள இரஷ்யக் கலர் படம்)

கட்டணம் வழக்கம்போல்

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு--கருத்தரங்கு, சென்னை.

கலை நிகழ்ச்சிகள்

பல்கலைக்கழக நூற்றுண்டு விழா மண்டபத்தில்

நாள்	மாலை 5-30 முதல் 6-30 வரை	மாலை 6.30 முதல் 8 வரை
4—1—68	சுசரிதா —நாட்டியம்	டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகம் —'இராஜராஜ சோழன்'
5—1—68	ஹேம மாலிலி —நாட்டியம்	மனோகர் குழுவினரின் நாடகம் —'சாணக்கிய சபதம்'
6—1—68	சிர்காழி கோவிந்தராசன் —பாட்டு குன்னக்குடி வைத்தியநாதன் —வயலின் மதராஸ் ஏ.கண்ணன்—மிருதங்கம் பாலக்காடு சுந்தரம் —கடம் மதராஸ் பக்கிரிசாமி —மோர்சிங்	சிவாஜி கணேசன் குழுவினரின் நாடகம்—'சிலம்பு'
8—1—68	மதுரை சோமசுந்தரம் —பாட்டு திருவாளபுத்தூர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை—வயலின் இராமநாதபுரம் முருக பூபதி —மிருதங்கம்	எஸ். வி. சகஸ்ரநாமம் குழுவினர் நாடகம்—'பாஞ்சாலி சபதம்'
9—1—68	வழுவூர் இராமையா பிள்ளை மாணவிகளின் —நாட்டியம்	எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் நாடகம்—'தமிழ் எங்கள் உயிர்'
10—1—68	நிருத்தியோதயா கலைக் கூடத்தைச் சேர்ந்த பத்மா —நாட்டியம்	கண்ணப்பன் குழுவினரின் நாடகம் —'கவிச்சக்கரவர்த்தி கம்பர்'
11—1—68	சேலம் ஜெயலட்சுமி —பாட்டு பரூர் அனந்தராமன் —வயலின் மதுரை கிருஷ்ண ஐயங்கார்—மிருதங்கம்	ஜெயலலிதா குழுவினர் நாட்டிய நாடகம் 'காவேரிதந்த கலைச்செல்வி'

கட்டணம்

	சீசன்	ஒரு நாளைக்கு
கீழ்த்தளம்	ரூ. 50	ரூ. 10
முதல் மாடி	ரூ. 25	ரூ. 5
இரண்டாம் மாடி	ரூ. 15	ரூ. 3

இராஜா அண்ணாமலை மன்றத்தில்

நாள்	மாலை 5-30 முதல் 6-30 வரை	மாலை 6.30 முதல் 8 வரை
4—1—68	எம். எல். வசந்தகுமாரி —பாட்டு திருவள்ளூர் சுப்பிரமணியம் —வயலின் தஞ்சாவூர் கிருஷ்ணமூர்த்தி ராவ் —மிருதங்கம் கே. எம். வைத்தியநாதன் —கடம்	கமலா குழுவினரின் நாட்டிய நாடகம் —சிலப்பதிகாரம், 'வள்ளி பரதம்'
5—1—68	டி. கே. பட்டம்மாள் —பாட்டு திருப்பாற்கடல் டி. எஸ். வீரராகவன் —வயலின் பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் —மிருதங்கம்	சந்திரகாந்தா குழுவினர் நாட்டிய நாடகம்—'பொன்னியின் செல்வி'
6—1—68	சிதம்பரம் ஜெயராமன் —பாட்டு தஞ்சாவூர்கோவிந்தராசன்வயலின் தஞ்சாவூர் நாகராசன்—மிருதங்கம் சீர்காழி டாக்டர் ஆர். கோவிந்தராசன்—கஞ்சிரா கோவை பாலு —மோர்சிங் ஏ. ஆர். செல்லப்பா —கடம்	பத்மினி குழுவினரின் நாட்டிய நாடகம்—'கண்ணகி'
8—1—68	பிருந்தா— முக்தா — வேகவாகினி —பாட்டு டி. கேசவலு —வயலின் சி. என். இராமசாமி— மிருதங்கம்	நடராஜ் — சகுந்தலா குழுவினர் நாட்டிய நாடகம்.
9—1—68	கே. பி. சுந்தராம்பாள் —பாட்டு	இராஜசுலோசனா குழுவினரின் நாட்டிய நாடகம்—பத்மாவதி பரிணயம்

கட்டணம்

	சீசன்	ஒரு நாளைக்கு
ரிசர்வ்டு	ரூ. 30	ரூ. 10
முதல் வகுப்பு	ரூ. 15	ரூ. 4
இரண்டாம் வகுப்பு	ரூ. 5	ரூ. 2

29-12 67 முதல் 31-12-67 வரை, 55A/1, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-6; (தொலைபேசி: 85273) என்ற முகவரியில் டிக்கெட்டுகள் கிடைக்கும்

1968 ஜனவரி முதல் நாளிலிருந்து நூற்றுண்டு விழா மண்டபத்திலும், அண்ணாமலை மன்றத்திலும் டிக்கெட்டுகள் கிடைக்கும்

மாநிலங்களவையில் கேட்ட குரல்:

'பிரிந்து போகும் உரிமை வேண்டும்'

'பிரிவினைக் கோரிக்கை நாட்டு விரோதமல்ல'

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு மசோதா மாநிலங்களவையில், விவாதத்தின் இறுதிக் கட்டத்தை அடைந்தபோது கேரள வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் பி. கே. குமரன்,

"இந்தியாவிலிருந்து எந்த ஒரு மாநிலமும் பிரிந்து போக அனுமதிக்கும் வகையில், அரசியல் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மசோதாவினையும் அதனைக் கொண்டுவந்திருக்கும் ஆளும் கட்சியின் நோக்கத்தினையும் குறை கண்டு பேசிய திரு. குமரன், இத்தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:—

"மத்திய ஆட்சி எதேச்சாதிகாரமாகச் செல்லும் நிலை வந்தால், அதற்கு ஒரு மாற்றுகப் பயன்படக்கூடிய மார்க்கம், பிரிந்து போகும் உரிமைதான்!

"பிரிந்து போகும் உரிமை கோருவதனை, தேசிய விரோதமாகக் கருத முடியாது; மாறாக, தேசிய ஒற்றுமைக்கு இந்த உரிமை மேலும் மெருகூட்டும்!

"பிரிந்து போகும் உரிமையை அரசியல் சட்டத்தில் கொண்டுள்ள நாடுகள்தான் சோவியத் யூனியனும் யுகோஸ்லேவியாவும்!

சென்னை 5-வது வட்டச் சீரணித் தொண்டர்கட்கு:

சென்னை 5-வது வட்டச் சீரணித் தொண்டர்கள் கூட்டம், 29 12-67 இரவு 7-மணிக்கு, வண்ணை—சோலையப்பன் தெரு, 16-எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்; சீரணியினர் தவருது கலந்துகொள்ளுமாறு வட்டச் சீரணித் தலைவர் க. ஆறுமுகம் கேட்டுக்கொள்கிறார்.

பிரிவினைத் தடுப்பு மசோதா இன்று நாடாளுமன்ற மேலவையில், எதிர்க் கட்சியினர் இல்லாமலே நிறைவேற்றப்பட்டது.

எஸ். ஆறுமுகம்

தொகுதிச் சுற்றுப்பயணம்

வீரபாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆறுமுகம் அவர்கள், பின்வருமாறு தொகுதிச் சுற்றுப்பயணம் செய்கிறார்:—

29—12—67 காலை 10-மணி முதல் இரவு 7-மணி வரையில் எடங்கணசாலை, கோனேரிப்பட்டி, ராசிகவுண்டனூர், மோட்டூர், கொசப்பட்டி, சாத்தம்பாளையம், மேட்டுக்காடு, சித்தர்கோவில், காடையாம்பட்டி, எளம்பிள்ளை, முருங்கப்பட்டி--பெத்தாம்பட்டி.

31—12—67 காலை 10-மணி முதல் இரவு 9-மணி வரையில் கண்டர்குலமாணிக்கம், மலைப் பெரியாம்பாளையம், காகாபாளையம், நடுவனேரி, தப்பக்குட்டை, கூத்தம்பாளையம் (வெள்ளையம்பாளையம), ஏகாபுரம் (கலியகவுண்டனூர்), புதூர், வைகுந்தம்.

நடக்க இருப்பவை

29--12--67

சென்னை 40-வது வடடம்

தோழமைக் கழகச் சார்பில் மாலை 7-மணிக்கு சூளை-மாணிக்க செட்டி வீதியில்; தலைவர்; கொ. சி. நடராசன்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம் எல்.ஏ., நா. வீராசாமி எம்,எல்.ஏ., மு. கன்னியப்பன் எம்.சி., து. கணபதி, கோ. புவிமன்னன்.

30--12--67

ஈரோடு

அண்ணா படிப்பகச் சார்பில் இரவு 7-மணிக்கு கோவில்மேட்டில்; தலைவர்: பூ. மகாலிங்கம்; பேசுவோர்: செ. கந்தப்பன் எம்.ஏ, எம்.பி., எம். ஆர். சனார்த்தனம் பி.எஸ்சி., புது. சேதுராசன், யூ. ஆர். சாமி, பொ. தமிழரசன், ந. செயச்சந்திரன், செ. காசி மாரியப்பன்.

குழுக் கூட்டங்கள்

நன்னிலம் வட்டம்

"நன்னிலம் வட்ட தி. மு. க. குழுக் கூட்டம், 29—12—67 காலை 10-மணிக்கு பேரளம் திரைப்பட அரங்கில்—தோழர்கள் சி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., கா. சுப்ரவேலு எம்.பி. ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்'' என்று வட்டச் செயலாளர் அ. நடராசன் அறிவிக்கிறார்.

ஈரோடு

ஈரோடு நகர தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் 30—12—67 இரவு 9-மணிக்கு நகரக் கழகப் பணிமனையில் (எஸ்.கே.சி. ரோடு) நடைபெறும்; உறுப்பினர்கள் தவருது வருகை தருமாறு செயலாளர் ப. ச. விசுவநாதன் கேட்டுக்கொள்கிறார்.

அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

சுற்றுப்பயணம்

டிச. 30 காலை 10 மணி: கோவை அரசினர் தலைமை மருத்துவமனையில் குடும்பக் கட்டுப்பாடு கருத்தரங்கினைத் துவக்கிவைத்தல்.

டிச. 31 காலை 8 மணி: தஞ்சாவூர்; 9 மணி: பெருமகளூர்—மருத்துவமனையைப் பார்வையிடல்; ஊராட்சிமன்ற வரவேற்பு; 11 மணி: மல்லிப்பட்டினம்—தாய்-சேய் நல விடுதி, மருத்துவமனைக் கட்டிடத் திறப்புவிழா; ஊராட்சிமன்ற வரவேற்பு; பகல் 12 மணி: அழகியநாயகிபுரம்—ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பார்வையிடல்; ஊராட்சிமன்ற வரவேற்பு; பிற்பகல் 3-30மணி: பேராவூரணி—அரசினர் மருத்துவமனையைப் பார்வையிடல்; மாலை 4 மணி: பேராவூரணி—ஊராட்சிமன்ற வரவேற்பு; 6 மணி: பொதக்குடி—மருத்துவமனை கட்டிடத் திறப்புவிழா; நோயாளிகள் தனி அறை பிரிவுக்கு அடிக்கல் நாட்டு விழா.

உடுமலை நாராயணன்

நிகழ்ச்சிகள்

பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்—கோவை மாவட்டச் செயலாளர் உடுமலை ப. நாராயணன் எம்.பி. அவர்கள், டிச. 29, 30, 31; சன. 1 ஆகிய நாட்களில் கோவை நகரம் 17, 8, 21, 29-வது வட்டாரங்களில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்வார்.

அவருடன் கோபி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் பி. ஏ. சாமிநாதன். கிணத்துக்கடவு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. கண்ணப்பன், பொதுக்குழு உறுப்பினர் மு, இராமநாதன், ஈரோடு வட்டச் செயலாளர் க. அன்பரசு ஆகியோரும் கலந்துகொள்வர்.

கா காளிமுத்து நிகழ்ச்சிகள்

டிச. 31: பொள்ளாச்சி; சன. 1: கரிசல்குளம்; 13: நெய்யூர்; 14: காட்டூர்; 15: திருநெல்வேலி; 20: கிளவிகுளம்; 23: பெங்களூர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) [illegible]